பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 10 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸில் இரண்டு நாள் அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி திரும்பினார்.

2. இந்தியா – லாவோஸ் இடையே பாதுகாப்பு, இறக்குமதி உள்ளிட்ட ஆறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகியுள்ளன.

3. தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், எல்லைப்பகுதிகளை பாதுகாப்பதிலும் பாதுகாப்புப்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு ஜப்பானை சேர்ந்த **Nihon Hidankyo** அமைப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸில் இரண்டு நாள் அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி திரும்பினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தியா – லாவோஸ் இடையே பாதுகாப்பு, இறக்குமதி, உள்ளிட்ட ஆறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகியுள்ளன.

லாவோஸில் நடைபெற்ற கிழக்காசிய உச்சிமாநாட்டில் கலந்துகொண்டபின் பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு **Sonexay Siphandone** –வை சந்தித்து பேசினார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது, திறன் மேம்பாடு, பேரிடர் மேலாண்மை, புதுப்பித்தக்க எரிசக்தி, பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு, மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விவாதித்தனர்.

பின்னர் லாவோஸ் அதிபர் திரு **Sisoulith** –ஐ சந்தித்து பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, கிழக்காசிய உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக பாராட்டு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, **Yagi** புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா வழங்கிய உதவிகளுக்காக அந்நாட்டு அதிபர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

லாவோஸ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்காக ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நிதியுதவி அளிக்க இந்தியா முடிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, 19-ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு நரேந்திர மோடி, இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் நலனை கருத்தில்கொண்டு, தென் சீன கடல் பகுதியில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார மேம்பாட்டுப்பணிகளில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாடுகள் இடையேயான பிரச்சினைகளுக்கு போர் மூலம் தீர்வுகாண முடியாது என்றும், அமைதி பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியிலான அணுகுமுறைகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

பயங்கரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்த உச்சிமாநாட்டில் பத்து ஆசிய நாடுகளும், ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, நியூசிலாந்து, ரஷ்யா மற்றும் அமெரிக்கா நாடுகளும் பங்கேற்றன.

<<<<<<>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், எல்லைப்பகுதிகளை பாதுகாப்பதிலும் பாதுகாப்புப்படையினர் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சிக்கிம் தலைநகர் கேங்டாக்கில் நடைபெற்ற ராணுவ தளபதிகள் மாநாட்டில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பிற்காக தங்களது இன்னுயிரை நீத்த துணிச்சலான வீரர்களுக்கு தலை வணங்குவதாக அவர் கூறினார்.

ராணுவ தளபதிகள் பங்கேற்கும் இத்தகைய மாநாடு, ஒட்டுமொத்த நாட்டிற்கும் பயன் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வதில் பாதுகாப்புப் படையினரின் அணுகுமுறை சிறப்பாக உள்ளது என்று அவர் கூறினார்.

பாதுகாப்பு தொடர்பான உத்திகளை வகுக்கும் போது அனைத்து அம்சங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எல்லைப்பகுதிகளில் தகவல் தொடர்பை மேம்படுத்தும் பணிகளில் ராணுவத்தினர் மேற்கொண்டுவரும் முயற்சிகள் பாராட்டத்தக்கது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

புதுதில்லியில் சாலைகள், திறந்த வெளிகள் மற்றும் இணைப்புச்சாலைகளில் மாசு ஏற்படுவதை தடுக்கும் வகையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமருக்கான முதன்மைச் செயலாளர் டாக்டர் பி கே மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார்.

தில்லி அரசு மற்றும் பல்வேறு துறை சார்ந்த உயரதிகாரிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

காற்று மாசுவை குறைக்க உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை அமல்படுத்துவது குறித்து அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

கட்டிடங்களை இடித்தல் மற்றும் கட்டுமான பணிகளின்போது ஏற்படும் மாசு அளவை கண்காணித்து குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைமுறைகளில் கொண்டுவரப்படும் மாற்றங்கள், பாதுகாப்பு அம்சங்களில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளக்கூடாது என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது

இதுதொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், டிஜிட்டல் அடிப்படையிலான பணப்பரிவர்த்தனைகள், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளதா என்பதை மறு ஆய்வு செய்யக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சம் வெளியிட்டுள்ள வங்கிகளுக்கான பரிவர்த்தனை நடைமுறை வழிகாட்டுதல்கள் முறையாக பின்பற்றப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

இத்தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த முக்கிய தலைவர்கள் போட்டியிட உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால பிரதமர் டாக்டர் ஹரிணி அமர சூரியா, கொழும்பு நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

எனினும் முன்னாள் அதிபர்கள் திரு மகிந்த ராஜபக்சே, திரு மைத்ரி பால சிரிசேனா, திரு கோத்தயபய ராஜபக்சே மற்றும் திரு ரணில் விக்ரமசிங்கே ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு செய்துள்ளனர்.

இலங்கையில் தேர்தல் நடைமுறைகள் நிறைவடையும் வரை விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

196 உறுப்பினர்களை கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு அடுத்த மாதம் 14-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு ஜப்பானை சேர்ந்த **Nihon Hidankyo** அமைப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்குவதற்கு அந்த அமைப்பு மேற்கொண்ட அயராத பணிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹிரோசிமா மற்றும் நாகசாகி போன்று உலகின் எந்த பகுதியிலும் மீண்டும் அணு ஆயுத பயன்பாடு இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் அந்த அமைப்பு பல்வேறு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

<<<<<<>>>>>

உலக சுகாதார நிறுவனம் வகுத்துள்ள தடுப்பூசிகளுக்கான சர்வதேச அளவிலான தர நிலைகள் முழு அளவில் பின்பற்றப்பட்டு வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தடுப்பூசிகளின் தர நிலை தொடர்பான மதிப்பீடுகளில் பாதுகாப்பு, நோய் தடுப்பு திறன் மற்றும் அதன் தரம் ஆகிய மூன்று அடிப்படை அம்சங்கள் ஆய்வு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தடுப்பூசி ஒழுங்குமுறை அமைப்பின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு நாடுகளை சேர்ந்த சர்வதேச நிபுணர் குழு கடந்த மாதம் ஜெனிவாவில் ஆய்வு மேற்கொண்டது.

இதில், இந்தியாவில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகள் நம்பகத்தன்மை கொண்டவையாக உள்ளது என்று தெரியவந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பாகிஸ்தானில் உள்ள பலுஜிஸ்தான் பகுதியில் உள்ள துக்கி நிலக்கரி சுரங்கத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் கையெறி குண்டுகள் மற்றும் ராக்கெட் லாஞ்சர்கள் பயன்படுத்தப்பட்டதாக துக்கி மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் காவல்துறையினர், துணை ராணுவப்படையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

லெபனானில் நிலவும் பதற்றமான சூழல் குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்நாட்டில் உள்ள பாதுகாப்பு சூழல் குறித்து இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ நா சபையின் அமைதி தூதுவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று சௌராஷ்ட்ரா அணி தனது முதல் இன்னிங்சில் 203 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

கோவையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற சௌராஷ்டிரா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

--------------

சென்னையில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் சென்னை மாவட்டம் இதுவரை 20 தங்கம், 10 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

சேலம் மாவட்டம் 7 தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஈரோடு மாவட்டம் 7 தங்கம் உட்பட 17 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

--------------

பிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – கஜகஸ்தானின் **Alexander Nedovyesov** இணை தோல்வியடைந்தது

--------------

சீனாவின் **Nanchang**-ல் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Pranay Shettigar,**-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tanvi Sharma, Alisha –** ஆகியோர் தோல்வியடைந்தனர்.

**<<<<<<END>>>>>**